செ.வெ.எண்: 04 நாள்: 01.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 385650 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கோதண்டராமபுரம் ஊராட்சி கீழபழுவஞ்சி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு 11வது சுற்று தடுப்பூசி போடும் பணி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (1.9.2016) நடைபெற்றது.

இதில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை போட்டும், கால்நடை வளர்ப்பவர்களுக்கு தாது உப்புக்கலவையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு கால்நடைகளான (பசு, எருமை) மாட்டினங்களில் ஏற்படும் கோமாரி (கால் மற்றும் வாய் நோய்)-ஐ கட்டுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள கீழபழுவஞ்சி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு 11வது சுற்று தடுப்பூசி போடும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தீவிர கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் மூலம் நடைபெறும் தடுப்பூசி முகாம் நமது மாவட்டம் முழுவதும் இன்று (01.09.2016) முதல் 21.09.2016 வரை 21 நாட்களுக்கு காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் மற்றும் மதியம் 3.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணியில் 53 மருத்துவக் குழுவினர் ஈடுபட்டுள்ளதுடன் 385650 (பசு, எருமை) கால்நடைகளுக்கு இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது. எனவே நமது மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது கால்நடைகளை தடுப்பூசி முகாமிற்கு கொண்டு சென்று தடுப்பூசியினை முறையாக போட்டு 100 சதவீதம் கோமாரி நோயை தடுக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இம்முகாமில் இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு. சதாசிவம், துணை இயக்குநர்கள் மரு.மோகன், மரு.சுப்பையா, உதவி இயக்குநர்கள் மரு.தேவதாஸ், மரு.ரவிச்சந்திரன், மரு.சஞ்சீவிராஜ், வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாஸ்கர், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**